

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேற்று (20.06.2024) அண்ணாசாலை, நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை வளாகத்தில் உள்ள தென் சென்னை, இணை 1, சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்கள் பதிவின்போது விரல்ரேகை ஒப்பீடு செய்து ஆள்மாறாட்டத்தை தடுக்கும் மேம்படுத்தப்பட்ட வசதியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், பதிவுத்துறைத் தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நே.சிற்றரசு - அன்பகம் கலை - எழிலன் நாகநாதன் பங்கேற்பு

# ஆயிரம் விளக்கு கிழக்கில் தயாநிதி மாறன் எம்.பி. இன்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

## பகுதிக் கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை அறிக்கை!

சென்னை, ஜூன் 21- ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி கழக செயலாளர் மா.பா.அன்புதுரை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., தலைமையில் கழக அமைப்பு இணை செயலாளர் அன்பகம் கலை, மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் முன்னிலையில்.

நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மத்திய சென்னை தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழக நாடாளு- மன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதியில் உள்ள அனைத்து வட்டங்களில் (22.06.2024) சனிக்கிழமை மாலை 6:00 மணி அளவில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார் துவங்கும் இடம்:- வட்டம்-111- மாடல்பள்ளிசாலை ஆயிரம் விளக்கு

111வது வட்டம்-மாடல் பள்ளி சாலை சபி முகமது தெரு வழியாக சுதந்திர நகர்,

111(ஆ) வட்டம் கிரீம்ஸ் சாலை அண்ணா சாலைபுத்தி பேகம் தெரு வழியாக கான்ட்ரன் ஸ்மித் ரோடு,

118வது வட்டம்-சீனிவாச பெருமாள் சன்னதி இரண்டாவது தெரு பொன்னுசாமி தெரு வழியாக அம்மையப்பன் லேன் புதுப்பேட்டை பிவி கோவில் தெரு வழியாக,

111 அ வட்டம்- கோபாலபுரம் வழியாக திருவீதியான் தெரு,

118 அ வட்டம்- முத்தையா தெரு சொக்கலிங்கம் காலனி வழியாக இளங்கோ சாலை பிள்ளையார் கோவில் தெரு நாட்டுமுத்து தெரு அண்ணா சாலை வழியாக,

117வது வட்டம்-நக்கீரன் நகர் கிரியப்பா சாலை ஜி.என் செட்டி சாலை வழியாக,

113வது வட்டம்-கிராம தெரு ஜோசியர் தெரு குமரப்பா லேன் வியாசர் தெரு வழியாக கோடம்பாக்கம் நெடுஞ் சாலை,

113 அ வட்டம்-சீரணிபுரம். தர்மபுரம், சோலையப்பன் தெரு வழியாக,

113-ஆ இராமகாமத் துப்புரம்,

117-அ திருமூர்த்தி தெரு வழியாக திருமலை சாலை விஜயராகவா ரோடு,

117வது வட்டம் திரு வி கா குடியிருப்பு தியாகராய ரோடு வழியாக தாமஸ் சாலை போக் ரோடு அமுதம் காலனி முடிவடைகிறது.

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் - நுங்கை வி.எஸ்.ராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் -ஜெ.நற்குணநாதன்,பா.இராபட்,வெற்றிச் செல்வி மாவட்டக் கழக நிர்வாகிகள் து. விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ். கலை, ஏ.சங்கீதா, ஜே.எஸ். அகஸ்டின்பாபு,

பகுதி கழக நிர்வாகிகள்: அவைத் தலைவர் எம்.ஆர். ஜம்புலிங்கம், துணை செயலா- ளர்கள் கோ. ரவி,மு.வெங்கடேசன்,டி. வைலட்மேரி, பொருளாளர் எம்.ஜெயகுமார், வட்ட செயலாளர் ஆர். பாபு,எப்.பீட்டர்ஜான், பா.மகேஷ்.டி.தேவராஜ், எம்.என்.விஷ்ணு.எஸ்.சத்தியபெருமாள்,எல்.தவமணி,கோ.யுவராஜ், எஸ். என்.கே.ராமன் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் வட்ட நிர்வாகிகள்,

அனைத்து அணிகளுடைய மாவட்ட பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பி.எல்.ஏ.2 (பாக முகவர்கள்), பி.எல்.சி. (பாக உறுப்பினர்- கள்), கழகத் தோழர்கள், இந்தியா கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சென்னை மேற்கு மாவட்டம்

# முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, திராவிட மாடல் அரசின் மூன்றாண்டு சாதனைகளை விளக்கும் பொதுக்கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்குதல் நிகழ்வு - இன்று (21.06.2024) நடைபெறும் நிகழ்ச்சிகள்!

**மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!**



சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் நிறைவு விழாவை முன்னிட்டும், திராவிட மாடல் அரசின் மூன்றாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் இன்று 21.06.2024 - வெள்ளிக் கிழமை கீழ்கண்ட விவரப்படி நடைபெறவுள்ளது.

| வட்டம் எண் | பகுதி / இடம் | கழக சொற்பொழி– வாளர்கள் பெயர் | நிகழ்ச்சி ஏற்பாடு |
|---|---|---|---|
| 110(அ) | ஆயிரம் விளக்கு மேற்கு / ராமலிங்க கோயில், புஷ்பா நகர் | குடியாத்தம் புவியரசி | எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன் தொழிலாளர் அணி, மாவட்ட அமைப்பாளர் |
| 114(அ) | சேப்பாக்கம் / சி.என்.கே.சாலை | தூத்துக்குடி சரத்பாலா | ஏ. தமீம் அன்சாரி வட்ட செயலாளர் |


மேற்கண்ட நிகழ்ச்சிகளில் அந்தந்த பகுதிக்குட்பட்ட பகுதி செயலாளர், மாவட்ட / மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட/பகுதி/வட்ட அமைப்பாளர், தலைவர், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பகுதி/வட்டக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கடையநல்லூர் கு.இராஜாமணி
### ஜூன் 21 (2009)



**தனது இளம் வயதிலேயே திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு 1946ல் மதுரையில் நடைபெற்ற 'கறுப்புச் சட்டை மாநாட்டில்' பங்கேற்றவர். அதன்பின்னர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு கடையநல்லூர் நகர மாணவர் அணி அமைப்பாளராகவும், பின்னர் கடையநல்லூர் நகரக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**நீதிகேட்டு நெடிய பயணத்தில் கலந்து கொண்டதுடன், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**"கடையநல்லூர் ராஜாமணி இன்று நேற்றல்ல, பல ஆண்டுகாலமாக கழக அரசின் சாதனைகளை சொந்த முயற்சியினால் துண்டு பிரசுரமாக அச்சடித்து மக்களிடம் வழங்கி பிரச்சாரம் செய்தவர்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### பிரதமர் நரேந்திரமோடியின் கூட்டணி ஆட்சியை

# காலம் கட்டளையிடும் மட்டும் "பொறுத்திருந்து பார்ப்போம்"

**கோ**வை மாநகர் "கொடிசியா" மைதானத்தில் பல லட்சக்கணக்கான மக்களுக்கு மத்தியில் "இந்தியா" கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் உரையாற்றியபின், வெற்றி பெற்ற 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேடையில் அமர்ந்திருக்க, இந்த மகத்தான வெற்றிக்கு விதைப் பதித்த தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை என்பது திராவிட இயக்க வரலாற்றில் ஓர் மைல் கல்லாக அமைந்தது என்பதை யாராலும் மறுக்கவியலாது.

மேலும் அந்த முப்பெரும் விழா நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக கழகத்தலைவர், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும், குறிப்பாக இந்திய தேசிய காங்கிரஸின் இளம் தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கும் இதயம் நெகிழ்ந்த நன்றியினைத் தெரிவித்தார். இதனைத் தொடந்து காலத்தே விழிப்புணர்வு பெற்ற வாக்காளர்களுக்கு "இந்தியா" கூட்டணியின் சார்பாக சிரம் தாழ்ந்த வணக்கத்தையும், நன்றியையும் உரித்தாக்கினார். முப்பெரும் விழா நிகழ்ச்சியின் ஓர் அங்கமான முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சி நிறைவு நாளான இன்று 40க்கும் 40 என்ற இலக்கு நோக்கிய பயணத்தில், 40 நாடாளுமன்றத் தொகுதிகளின் வெற்றியை மலர்மாலையாக்கி, நவீன தமிழகத்தின் சிற்பி, சமூகவிஞ்ஞானி கலைஞருக்கு அறிவிக்கிறேன் என்று ஆர்ப்பரிக்கும் கடல் அலையைப் போல் எழுந்த மக்களின் தன்னெழுச்சியான மகிழ்ச்சிப் பேரலைக்கு மத்தியில் பொங்கிடும் மகிழ்ச்சிப்பெருக்குடன் அறிவித்தார். இதுவே தங்களின் கனவுக்கான எங்களின் நினைவுப் பரிசு எனக்கூறி நூற்றாண்டு விழா நிகழ்ச்சியை நிறைவு செய்தார்!



**பொன்.முத்துராமலிங்கம்,**
*முன்னாள் அமைச்சர்,*
*உயர்மட்ட செயல் திட்டக்குழு உறுப்பினர்.*

இதனைத் தொடர்ந்து " 'இந்தியா' கூட்டணித் தலைவர்கள் இந்த மகத்தான வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்த எனது தேர்தல் பணிகளையும், உழைப்பையும் பாராட்டினார்கள். கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் என்னைப் பாராட்டியதோடு மட்டுமல்லாமல், இந்திய அரசியல் சட்டத்தை சீர்குலைக்க முயன்ற பிரதமர் நரேந்திரமோடி இந்திய அரசியல் சட்டத்தை கையில் எடுத்து மெத்தப்பணிவுடன் வணங்கி, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கூட்டத்தில் உரையாற்றிய காட்சியை, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், இந்த நிகழ்வை "இந்தியா" கூட்டணியின் 41வது வெற்றியாக கருதுகிறேன்" என கடலலைபோல்எழுந்த கரவொலிப்புயலுக்கு மத்தியிலே அறிவித்தார்!! இந்த வெற்றியினைத் தொடர்ந்து 2026 ஆம் ஆண்டு வரவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளைக் கைப்பற்ற வேண்டுமென தொண்டர்களின் மகிழ்ச்சிப் பெருவெள்ளத்திற்கு மத்தியில் அரசியல் சூளுரையை ஒவ்வொரு "இந்தியா" கூட்டணி கட்சிகளைச் சார்ந்த தொண்டனும் மேற்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் (NDAA) சார்பாக ஆட்சி அமைத்த பின்னர் அந்த கூட்டணியைச் சார்ந்த சில தலைவர்கள், தமிழ்நாடு பாண்டிச்சேரியின் சார்பாக வெற்றிபெற்று நாடாளுமன்றம் செல்லவுள்ள "இந்தியா" கூட்டணியைச் சார்ந்த 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்துவிடமுடியும் என்ற கேள்வியைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் எழுப்பிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் ஜனநாயகத்தைப் பற்றி புரிந்து கொண்டது அவ்வளவுதான். எதிர்க்கட்சி என்பது ஆட்சியின் ஓர் அங்கம் என்பது அவர்களுக்குப் புரியவில்லை.

கடந்தகாலத்தில் எண்ணிக்கை பலத்தின் மூலமாக ஜனநாயக ஆட்சியில் ஓர் சர்வாதிகார ஆட்சியை நடைமுறைப் படுத்தியவர்களுக்கு, இந்த ஜனநாயக அடிப்படைகள் பற்றி அறிந்திட வாய்ப்பில்லைதான்! ஆனால், திராவிட முன்னேற்ற கழகம் ஜனநாயகத்தில் ஆழ்ந்த நம்பிக்கையும், உறுதிப்பாடும் கொண்ட இயக்கமாகும். ஜனநாயக ஆட்சிமுறையை பிரதமர் நரேந்திரமோடி தலைமையில் உள்ள ஒன்றிய அரசு உருக்குலைக்க முயற்சிக்குமானால் திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட "இந்தியா" கூட்டணியை சார்ந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் கடும் கண்டனத்தைத் தொடர்ந்து ஜனநாயக வழிமுறைகளைப் பின்பற்றித் தெரிவிப்பார்கள். அதுமட்டுமல்ல; தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சிகளின் ஆட்சி எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை மீறி சட்டங்களையும், திட்டங்களையும் எண்ணிக்கைபலத்தில் அடிப்படையில் நிறைவேற்றிட முடியும் என்று கூறுபவர்களுக்குத்தான் கோவையில் நடைபெற்ற முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில் பொருள் பொதிந்த ஆங்கிலச் சொற்றொடரான "பொறுத்திருந்து பாருங்கள்" ("Wait and See") என்ற எச்சரிக்கை முழக்கத்தை முன்வைத்தார்.

உலக வரலாற்றில் பொதுவுடைமைச் சித்தாந்தக் கருவூலம் என்று கருதப்படும் காரல் மார்க்ஸ்சும், பிரெட்ரிக் எங்கெல்ஸ்சும் "உலகத் தொழிலாளர்களே ஒன்றுசேருங்கள்" என்றனர், (Workers of the world unite) இந்த முழக்கம் உலகம் முழுமையும் உழைக்கும் வர்க்கம் எங்கெல்லாம் இருந்ததோ, அங்கெல்லாம் காட்டுத்தீபோல் பரவியது. தொழிலாள வர்க்கத்தின் உரிமைகள் மீட்டெடுக்கப்பட்டன. தொழிலாளர்கள் மத்தியில் மகத்தான விழிப்புணர்ச்சியையும், ஒற்றுமையையும் உருவாக்கி ஏகாதிபத்திய சக்திகளை அச்சம் கொள்ளச் செய்த பொதுவுடமை சித்தாந்தப் போர்க்களத்தில் ஓங்கி ஒலித்தது இந்த முழக்கம்தான்!

இப்படி உலக சமூக, அரசியல், பொருளாதார வரலாற்றில் சில தொலைநோக்குச் சிந்தனையாளர்கள் முன்வைத்த முழக்கங்கள்தான் எதிர்கால மாற்றங்களுக்கு மக்களை ஒன்றுதிரட்டும் மகத்தான ஈர்ப்பு சக்தியாக அமைந்தது என்பது கடந்தகால வரலாறாகும். அத்தகைய ஓர் ஈர்ப்பு சக்தியை மக்கள் மத்தியில் உருவாக்கும் முழக்கமாகத்தான் "பொறுத்திருந்து பாருங்கள்" ("Wait and See") என்ற சொற்றொடராகும். இந்த முழக்கம் என்பது ஒன்றிய ஆட்சியில் எத்தகைய பின்விளைவுகள் உருவாகும் என்பதற்கான தொலைநோக்குப் பார்வையின் வெளிப்பாடாகும்.எனவே அதற்கான எதிர்வினையாற்றிட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் எதிர்காலத்தில் எப்படிச் செயல்பட வேண்டுமெனக் குறிப்பிடுகிறார்.

"இந்தமுறை நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எப்படிச் செயல்படவேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்றால்... நாடாளுமன்றத்தில் பேரறிஞர் அண்ணா பேசினார், ஈ.வி.கே. சம்பத் பேசினார், நாஞ்சிலார் பேசினார், முரசொலிமாறன் பேசினார் என்று இன்றைக்கும் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோமே... அதுபோல ஒட்டுமொத்த நாடாளுமன்றத்தின் கவனத்தையும் ஈர்க்கின்றமாதிரி மற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்ற மாதிரி உங்களுடைய நாடாளுமன்ற உரைகள் ஒவ்வொன்றும் அமைய வேண்டும்! இந்தியாவின் அரசியல் சட்டத்தை சமூக நீதியை மதச்சார்பின்மையை நாட்டின் பன்முகத் தன்மையை இந்திய பண்பாட்டு விழுமியங்களை காப்பாற்றுகின்ற மாதிரி அது இருக்கவேண்டும். அப்படித்தான் அமையும் என்று நான் நம்புகிறேன்" என்று புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனைகளை வழங்கியதோடு தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகவும் வாதாட வேண்டும்; அதுமட்டுமல்ல; பாரதிய ஜனதா கட்சியின் பாசிசப்போக்கைத் தடுக்கும் அரணாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்திய அரசியல் சட்டப் புத்தகத்தை தேசிய ஜனநாயகக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் நெற்றியில் தொட்டு வணங்கியதால்மட்டும், பிரதமர் நரேந்திர மோடி அரசியல் சட்டத்தின் நோக்கப்படி எதிர்காலத்தில் நடப்பாரா (?) என்பது தற்போது விடை காணவியலாத புதிராகவுள்ளது. பிரதமர் மோடியின் எதிர்கால செயல்பாடுகள் எப்படியிருக்கும் என்பதில் இயல்பாக உருவான ஐயப்பாட்டின் காரணமாகத்தான் தமிழக முதல்வர் கோவை முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில் "பொருத்திருந்து பாருங்கள்" (Wait and Seee) என்ற எச்சரிக்கை முழக்கத்தை முன்வைத்தார். தமிழக முதல்வரின் ஐயப்பாட்டை வழிமொழிகின்ற வகையில் 2024 ஜுன் மாதம் 18ஆம் தேதி இந்து ஆங்கில நாளிதழில் இந்திய உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர், முன்னாள் உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள், சங்கத் தலைவர் துஷ்வந்தாவே ஆங்கிலத்தில் அரசியல் சட்டத்திற்கான மரியாதை என்பது அரசியல் சட்டத்தின் மதிப்பை போலித்தனமான மரியாதைக்குரியதாக அதனை வணங்குவதுமட்டும்தான் என்று குறைத்து விடக்கூடாது என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார்கள். (Constitutional respect should not be reduced to optics Hindu date 18.06.2024, page no:6)

பிரதமர் நரேந்திரமோடி இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படை நோக்கங்களைப் பின்பற்றி எதிர்காலத்தில் நடப்பாரா (?) என்பது ஐயப்பாட்டிற்குரியதுதான். காரணம் எதுவெனில், அவர் 2014 ஆம் ஆண்டு முதல் பிரதம அமைச்சராக இருந்த பொழுதும், அதற்கு முன்னர் குஜராத் மாநிலத்தின் முதல்வராக இருந்த பொழுதும், அரசியல் சட்டத்தின் நோக்கங்களை முழுமையாகப் பின்பற்றினாரா என்பதே மிகப்பெரிய கேள்விக்குறியாகும். எனவே, இனி எதிர்காலத்தில் பிரதமர் நரேந்திரமோடி அரசியல் சட்டத்தின் நோக்கங்களின் அடிப்படையில் நடந்து கொள்வாரா என்பதை உறுதியாகக் கூறவியலாது என்று கட்டுரையாளர் குறிப்பிடுகிறார். ("But does Mr. Modi respect the constitution of India in letter and spirit? His ac tion so far as the Prime Minister since 2024, or for that matters as the Chief Minister of the Gujarat, show other swise" Hindu date 18.06.2024, page no:6)

கட்டுரையாளர் துஷ்வந் தாவே தன்னுடை கட்டுரையில், பாபாஸாகிப் அம்பேத்கர் அவர்கள் பெரிதும் அச்சப்பட்டதாகக் கூறும் செய்தி எதுவெனில், தனிமனித வாழ்க்கையில் நம்பிக்கையின் அடிப்படையில் பின்பற்றக் கூடிய, "பக்தி மார்க்கத்தை" அரசியலில் பயன்படுத்த முற்பட்டால், அரசியல் சட்ட அடிப்படையிலான சர்வாதிகாரத்திற்கு வழி வகுக்கும் என அரசியல் சட்ட நிர்ணயக் குழு உறுப்பினர்கள் அனைவரும் கருதினர் என தெரிவிக்கிறார்.

மேலும் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்ற காலகட்டத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட பிரதமர் நரேந்திரமோடி இந்திய அரசியல் சட்டத்தின் நியதிகளையெல்லாம் புறந்தள்ளிவிட்டு, சிறுபான்மை மக்களைக் கடுமையாக விமர்சித்தார், எதிர்க்கட்சியினர் மதிக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல; அவமதிக்கப்பட்டனர், பிரதம அமைச்சரின் வெறுப்பு பேச்சுக்களையோ, தேர்தல் நடத்தை விதிகள் மீறப்படுவதையோ, அதற்கான நிறுவனம் முறையாக கண்டிக்கவில்லை. அதற்குக் காரணம், எங்கும், எல்லாத் துறைகளிலும் அச்ச உணர்வும், பயமும் இரண்டறக் கலந்து நாடு முழுவதும் பரவியிருந்தது. இதன் மூலம் ஜனநாயகமே அச்சுறுத்தலுக்கு ஆளானது என கட்டுரையாளர் தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறார். B.R. Ambedkar did warn that Bhakti in life is good for the salva tion of the soul. But in politics, it is the sure path to dictator ship, what we are witnessing is constitutional dictatorship, something that the framers were strongly against Hindu date 18.06.2024, page no:6)

மேலும், கடந்த நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்ற காலகட்டத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட பிரதமர் நரேந்திரமோடி இந்திய அரசியல் சட்டத்தின் நியதிகளையெல்லாம் புறந்தள்ளிவிட்டு, சிறுபான்மை மக்களை கடுமையாக விமர்சித்தார். எதிர்க்கட்சியினர் மதிக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல; அவமதிக்கப்பட்டனர், பிரதம அமைச்சரின் வெறுப்பு பேச்சுகளையோ, தேர்தல் நடத்தை விதிகள் மீறப்படுவதையோ அதற்கான நிறுவனம் முறையாக கண்டிக்கவில்லை. அதற்குக் காரணம், எங்கும், எல்லாத் துறைகளிலும் அச்ச உணர்வும், பயமும் இரண்டரக் கலந்து நாடு முழுவதும் பரவியிருந்தது. இதன் மூலம் ஜனநாயகமே அச்சுறுத்தலுக்கு ஆளானது என கட்டுரையாளர் தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறார்.

(The Prime Minister's campaign in the recently conclud ed general election is living proof of a complete disregard for constitutional morality. While on the campaign trail, he repeatedly attacked the largest minority community in the country, forgetting that secularism runs through the foun dation of the constitution. He belittled the Opposition in every speech forgetting that under our democracy, the Opposition has a place of honour. Yet, not one institution or its guardian stood up to remind him, much less stop him. The Prime Minister, as election laws stand today, is liable to be disqualified from Parliament. But who has courage in a nation where there is fear stalking in every nook and corner ? so much for democracy Hindu date 18.06.2024, page no:6)

இத்தகைய அச்சமும் கவலையும் தோய்ந்த சூழ்நிலையில் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் பொறுப்பேற்றுள்ளார். அதுமட்டுமல்ல, அரசியல் ஆய்வாளர்களும், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட மக்களும் எதிர்கால இந்தியா பற்றி பெரிதும் கவலையடைந்து இருக்கிறார்கள். இந்த அரசியல் இருள்சூழ்ந்த சூழ்நிலையில்தான் மிகுந்த நிதானத்துடன் தொலைநோக்கு பார்வையுடன் கோவை முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் பொருள் பொதிந்த சொற்றொடரான "பொறுத்திருந்து பார்ப்போம்" என்று முழங்கினார். எனவே, இந்த இக்கட்டான இருள்சூழ்ந்த அரசியல் சூழ்நிலையில் எதிர்கால விடியலை நோக்கி சேணம் கட்டிய பந்தயக் குதிரைகளாக கழகத் தலைவரின் கட்டளைகளை எதிர்நோக்கி அணிவகுப்போம் வாரீர்!